# GOVT. HR. SEC. SCHOOL, BRAMMAKUNDAM, VILLUPURAM DISTRICT

## 11 Standard Accountancy Material

## 11.முதலின மற்றும் வருவாயின நடவடிக்கைகள்

### 1.முதலின நடவடிக்கைகள்:–

தொழில் நிறுவனங்களுக்கு ஒரு ஆண்டுக்கு மேல் அல்லது ஒரு செயல்பாட்டுச் சுழலுக்கு நன்மை தரக் கூடியதும், சேவை அளிக்கக் கூடியதுமான நடவடிக்கைகள் யாவும் முதலின நடவடிக்கைகள் எனப்படும். முதலின நடவடிக்கைகள் முதலின செலவினம், முதலின வரவுகள் எனப் பிரிக்கலாம்.

### 1.1.முதலினச் செலவினம்

நீண்ட காலத்திற்கு பயன்படுத்தும் சொத்துகள், பொருள்கள் வாங்கும் செலவுகள் முதலினச் செலவுகள் எனப்படும். இது ஒரு தொடராச் செலவினம் ஆகும்.

1. நிலைச் சொத்துகளை வாங்குதல்.
2. நிலைத் சொத்தின் மதிப்பை மேலும் அதிகப்படுத்தல்.
3. தொழிலில் வருவாய் ஈட்டும் திறனை அதிகரிக்கச் செய்தல்.
4. திரும்பத் திரும்ப நிகழாச் செலவுகள்.
5. விற்பனைக்கு அல்லாதவைகள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றாக இருக்கும்.

www.Padasalai.Net

*எடுத்துக்காட்டு*

1. அறைகலன்/ நிலம் / கட்டடம் / பொறிவகை / இயந்திரம் / சீருந்து / நற்பெயர் வாங்கியது
2. பழைய அறைகலன்/ நிலம் / கட்டடம் / பொறிவகை / இயந்திரம் / சீருந்து வாங்கியது
3. பழைய இயந்திரம் வாங்கியவுடன் பழுதுபார்க்கச் செலவிட்டது
4. பொறிவகையை நிர்மானிக்க வேலையாள்களுக்கு கொடுத்த கூலி
5. உரிமம் பெற செலவிட்டது
6. இயந்திரத்தின் ஒரு பகுதியை மாற்றச் செலவிட்டது
7. கடன் பெற சட்டமுறைச் செலவுகள் செய்தது
8. பெட்ரோல் என்ஜினுக்குப் பதில் டீசல் எஞ்சின் மாற்ற செலவு செய்தது
9. திரையரங்கின் இருப்பிடங்களைப் பெருக்குவதற்கானச் செலவு
10. மின்சாரப் பயன்பாட்டைக் குறைக்க புதியவகை இயந்திரம் மாற்றியது
11. இயந்திரம் நிறுவுவதற்கு செலவு செய்தது
12. இயந்திரத்தின் பழுதடைந்த பகுதியை மாற்றுவதற்காக செலவு செய்தது


http://www.trbtnpsc.com/2017/06/latest-11th-study-materials-tamil-medium-english-medium.html

13. பழைய இயந்திரத்தை வாங்கியவுடன் முழுமையாக புதுப்பிக்கச் செலவு செய்தது
14. காப்புரிமை / பதிப்புரிமை / வணிகக்குறி பெறச் செலவு செய்தது
15. புதிய இயந்திரம் கொண்டுவர வண்டிச் சத்தம் செலுத்தியது
16. அரசாணையின்படி மழைநீர் சேகரிப்பு அமைப்பு செய்ய செலவு
17. கிடங்கு கட்டடம் கட்டுமானச் செலவு
18. நிலம் வாங்கியதற்கான பதிவுச் செலவு
19. வாங்கிய பழைய கட்டடத்தைப் புதுப்பிக்க செலவு செய்தது.
20. பழைய எந்திரத்தை வாங்கியவுடன் பழுதுபார்த்தது.
21. புதிய எந்திரத்தை நிறுவ வேலையாள்களுக்கு கூலி கொடுத்தது.
22. பழைய அறைகலனை எடுத்துவிட்டு புதிய அறைகலன் போட்டது.
23. கடன் பெற சட்டமுறைச் செலவு செய்தது.
24. நீண்ட காலத்திற்கு பயன்படும் சொத்துகள் / பொருள்கள் வாங்கும் செலவுகள்

## 1.2.முதலின வரவுகள்

நீண்ட காலத்திற்குப் பயன்படும் வகையில் தொழிலில் முதலீடு செய்வது முதலின வரவு ஆகும். இதில் பிறரிடம் பெற்ற நீண்ட காலக் கடன்கள் மற்றும் நிலைச்சொத்துகள் விற்பதின் மூலம் கிடைக்கும் தொகை ஆகியனவும் அடங்கும். இவை தொடராத் தன்மை கொண்டவை ஆகும்.

www.Padasalai.Net

1. உரிமையாளர் தொழிலில் இடும் முதல்
2. கடன்கள்
3. நிலைச் சொத்து விற்பது.

*எடுத்துக்காட்டு*

1. சங்கர் தொழில் தொடங்க முதல் போட்டது ரூ. 5,00,000
2. பகவதி தன் தொழிலில் ரூ. 50,000 கூடுதல் முதல் போட்டது.
3. கடன் பெற ரூ. 1,50,000 மதிப்புள்ள கடன் பத்திரங்கள் வெளியிட்டது.
4. ரூ. 2,50,000 மதிப்புள்ள பங்குகள் வெளியிட்டது.
5. அறைகலன்/ நிலம் / கட்டடம் / பொறிவகை / இயந்திரம் / சீருந்து / நற்பெயர் விற்றது.
6. கடன் பெற்றது ரூ. 70,000
7. நீண்ட காலத்திற்குப் பயன்படும் வகையில் தொழிலில் முதலீடு செய்தது

## 2.வருவாயின நடவடிக்கைகள் :

ஒரு ஆண்டுக்கு மட்டும் பயன்தரக் கூடியதும், சேவைகள் அளிக்கக் கூடியதுமான தொழில் நடவடிக்கைகள் வருவாயின நடவடிக்கைகள் எனப்படும். வருவாயின நடவடிக்கைகள் வருவாயினச் செலவுகள், வருவாயின வரவுகள் என பிரிக்கலாம்.

**2.1.வருவாயினச் செலவுகள் :**

நிறுவனத்தின் அன்றாடச் செயல்பாடுகளுக்கு வழங்கும் தொகை வருவாயினச் செலவுகள் எனப்படும். தொழிலின் வருவாய் ஈட்டும் திறனைத் தக்க வைத்துக்கொள்ளச் செலவிடுவதும் ஆகும். நிலைச்சொத்துகளை பாதுகாத்துக் கொள்ளவும் பயன்படுகிறது. இது தொடர் தன்மையினதாகும்.

1. மறுவிற்பனைக்காக பொருள்கள் வாங்கும் செலவு.
2. அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள்
3. விற்பனை மற்றும் பகிர்மானச் செலவுகள்
4. நிலைச் சொத்துக்களின் தேய்மானம், கடன்களின் மீதான வட்டி முதலியன.
5. பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகள்.

***எடுத்துக்காட்டு***

1. கொள்முதல் செய்த சரக்கினைக் கொண்டு வர சத்தம் கொடுத்தது
2. தீக்காப்பீட்டு முனைமம் / காப்பீட்டு முனைமம் செலுத்தியது
3. மேலாளரின் ஆண்டு ஊதியம்
4. பொறிவகை / அறைகலன் பழுது பார்த்தது
5. மின்கட்டணம் செலுத்தியது
6. லாரிக்கு டயர் வாங்கியது
7. எரிபொருள் வாங்க செலவு செய்தது
8. உள் தூக்குக்கூலி / வெளி தூக்குக்கூலி கொடுத்தது
9. சரக்கு கொள்முதல் செய்தது
10. கட்டடத்திற்கு தீக்காப்பீடு செய்தது
11. மாத இதழுக்கு சந்தா செலுத்தியது
12. பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கியது.
13. கொள்முதல் செய்ததற்கு உள் தூக்குக் கூலி கொடுத்தது.
14. கட்டடப் பராமரிப்புச் செலவு
15. வெள்ளை அடிக்கச் செலவு செய்தது
16. நிலைச் சொத்துக்களின் (அறைகலன்/ கட்டடம் / பொறிவகை / இயந்திரம்) தேய்மானம்
17. கடன் மீதான வட்டி செலுத்தியது
18. அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள் செய்தது
19. விற்பனை மற்றும் பகிர்மானச் செலவுகள் செய்தது
20. மறுவிற்பனைக்காக பொருள்கள் வாங்கும் செலவு

www.Padasalai.Net

Prepared By: KHADER .M, M.Com., B.Ed.,M.Phil., P.G.Assistant (Commerce), GHSS, Brammakundam. Villupuram District. Cell.94863 35786
http://www.trbtnpsc.com/2017/06/latest-11th-study-materials-tamil-medium-english-medium.html

21. பழைய சீருந்தை புதுப்பிக்கச் செலவு செய்தது

**2.2 வருவாயின வரவுகள் :**

தொழிலின் நடவடிக்கைகள் மூலம் ஈட்டும் வருமானங்கள் வருவாயின வரவுகள் எனப்படும். இது தொடர்ந்து நிகழும் தன்மையினதாகும்.

1. பண்டங்கள் மற்றும் பணிகள் விற்பனை.
2. கழிவு மற்றும் தள்ளுபடி பெற்றது.
3. பங்காதாயம், முதலீடுகள் மீதான வட்டி ஆகியவை.

***எடுத்துக்காட்டு***

1. பங்குகளில் முதலீடு செய்ததிலிருந்து பங்காதாயம் ***பெற்றது*** ரூ. 5,000.
2. ரூ. 1,200 அடக்க விலை கொண்ட டி சர்ட்கள் ரூ. 1,500க்கு விற்பனை செய்தது.
3. வாடகை / கழிவு / பங்காதாயம் / முதலீடுகள் மீதான வட்டி / தள்ளுபடி ***பெற்றது.***
4. தொழிலின் நடவடிக்கைகள் மூலம் ஈட்டும் வருமானங்கள்

**3.நீள் பயன் வருவாயினச் செலவுகள் :**

பேரளவில் செய்த ஒரு வருவாயினச் செலவு அதன் பயனை அந்த நடப்பு ஆண்டிலேயே நுகரப்படாமல், வரும் பல ஆண்டுகளில் அதன் பயனை நுகரக் கூடியவையாக இருப்பின், அச்செலவு நீள் பயன் வருவாயினச் செலவு எனக்கூறலாம்.

www.Padasalai.Net

1. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான செலவுகள்
2. எதிர்பாராமல் தீ மற்றும் இடி மின்னல்களினால் ஏற்படும் பேரிழப்பு
3. விளம்பரத்திற்கு அதிகச் செலவிடுதல்

***எடுத்துக்காட்டு***

1. புதிய திரைப்படம் வெளியான முதல் வாரத்தில், விளம்பரத்திற்காக இலவசக் கட்டண ரசீதுகள் வழங்கியது
2. விற்பனையைப் பெருக்குவதற்காக விற்பனை மேலாளர் ஜப்பான் சென்றுவர பயணச் செலவு செய்தது
3. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்காகச் செலவு செய்தது
4. விளம்பரச் செலவு அதிகமாகச் செய்தது
5. எதிர்பாராமல் தீ மற்றும் இடி மின்னல்களினால் ஏற்பட்ட பேரிழப்புக்காக செலவு செய்தது

**4.1. முதலின இலாபம்**

தொழிலின் அன்றாடச் செயல்களின் மூலம் பெறப்படாத இலாபம் முதலின இலாபம் எனப்படும். நிலைச்சொத்து விற்பதின் மூலம் கிடைக்கும் இலாபம் ஒரு முதலின இலாபம் ஆகும்.

*எடுத்துக்காட்டு*

1. சொத்து விற்பதினால் ஏற்பட்ட இலாபம் ரூ. 900.
2. பழைய அறைகலன் விற்றதன் மூலம் கிடைத்த இலாபம்
3. ரூ. 70,000 அடக்கவிலை முதலீடுகள் வாங்கி ரூ. 90,000க்கு விற்றது
4. தொழிலின் அன்றாடச் செயல்களின் மூலம் பெறப்படாத இலாபம்

**4.2.முதலின நட்டங்கள்**

தொழிலின் வழக்கமான செயல்களினால் ஏற்படாத நட்டங்கள் முதலின நட்டங்கள் ஆகும். நிலைச்சொத்து விற்பதனால் ஏற்பட்ட நட்டம் ஒரு முதலின நட்டம் ஆகும்.

*எடுத்துக்காட்டு*

1. ரூ. 10,000 மதிப்புள்ள பழைய இயந்திரத்தை ரூ. 9,000க்கு விற்றது.
2. அறைகலன் விற்றதின் நட்டம் ரூ. 450.
3. தொழிலின் வழக்கமான செயல்களினால் ஏற்படாத நட்டம்

**5.1.வருவாயின இலாபம்**

தொழிலின் வழக்கமான செயல்களின் மூலம் ஈட்டும் இலாபமே வருவாயின இலாபம் எனப்படும்.

நிகர இலாபம் – வருவாயினச் செலவுகளைக் காட்டிலும் வருவாயின வரவுகள் மிகுதி.

www.Padasalai.Net

*எடுத்துக்காட்டு*

1. தொழிலின் வழக்கமான செயல்களின் மூலம் ஈட்டும் இலாபம்
2. ரூ. 1,500 அடக்க விலை கொண்ட டி சர்ட்கள் ரூ. 2,500க்கு விற்பனை செய்ததில் ஏற்பட்ட இலாபம்

**5.2.வருவாயின நட்டங்கள்**

தொழிலின் வழக்கமான செயல்களினால் ஏற்படும் நட்டங்கள் வருவாயின நட்டங்கள் எனப்படும்.

நிகர நட்டம் – வருவாயின வரவுகளைக் காட்டிலும் வருவாயினச் செலவுகள் மிகுதி.

*எடுத்துக்காட்டு*

1. தொழிலில் கிடைக்கப் பெற்ற நிகர நட்டம்
2. ரூ. 2,500 அடக்க விலை கொண்ட சரக்கை ரூ. 2,000க்கு விற்பனை செய்ததில் ஏற்பட்ட நட்டம்

# 12.இறுதிக் கணக்குகள்

## 1.இறுதிக் கணக்குகளின் பிரிவுகள்:

ஒரு வணிகத்தின் இறுதிக் கணக்குகள் பொதுவாக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. முதல் பகுதி வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்காகும். வணிகத்தின் நிகர முடிவினை கண்டுணர இது தயாரிக்கப்படுகிறது. இரண்டாவது பகுதி இருப்பு நிலைக் குறிப்பாகும். இதன் மூலம் வணிகத்தின் நிதிநிலையை அறிய முடியும்.

இறுதிக் கணக்குகள்

வியாபார மற்றும் இலாப நட்ட கணக்கு | இருப்பு நிலை குறிப்பு

## 1.1 .வியாபாரக் கணக்கு:

வியாபாரம் என்பது வாங்குதல் மற்றும் விற்றலைக் குறிக்கின்றது. பொருளை வாங்குதல் மற்றும் விற்றலின் வெளிப்பாட்டினை வியாபாரக் கணக்கு காண்பிக்கின்றது.

***........ நளோடு முடிவடையும் ஆண்டுக்கான வியாபாரக் கணக்கு***

www.Padasalai.Net

ப வ

| விவரம் | ரூ. | ரூ. | விவரம் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | | xxx | விற்பனை | xxx | |
| கொள்முதல் | xxx | | கழிக்க: விற்பனைத் திருப்பம் | xxx | xxx |
| கழிக்க: கொள்முதல் திருப்பம் | xxx | xxx | இறுதிச் சரக்கிருப்பு | | xxx |
| கூலி | | xxx | மொத்த நட்டம் கீ/இ | | xxx |
| உள்தூக்குக்கூலி | | xxx | (இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படுவது) | | |
| அகற்றீட்டுக் கட்டணம் | | xxx | | | |
| கட்டுமச் செலவுகள் | | xxx | | | |
| துறைமுகக் கட்டணம் | | xxx | | | |
| ஆலை மின் சக்தி | | xxx | | | |
| நுழைவு வரி | | xxx | | | |
| மொத்த இலாபம் கீ/இ (இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படுவது) | | xxx | | | |
| | | xxx | | | xxx |


http://www.trbtnpsc.com/2017/06/latest-11th-study-materials-tamil-medium-english-medium.html

## 1.2.இலாப, நட்டக் கணக்கு:

மொத்த இலாபம் அல்லது மொத்த நட்டத்தினை கணக்கிட்டப்பின்னர் இலாப நட்டக் கணக்கு தயாரிக்கப்படுகின்றது. நிகர இலாபத்தைப் பெறுவதற்கு, கொள்முதல் மற்றும் பொருளை உற்பத்தி செய்வதற்கான செலவுகள் மட்டுமல்லாது, ஏனைய பிற செலவுகளை ஒரு வணிகர் செய்கின்றார். இவ்வாறு செய்யக்கூடிய செலவுகள் மொத்த இலாபத்தை விட குறைவாக இருக்குமேயானால் அதன் விளைவு நிகர இலாபமாகும். இவ்வாறான அனைத்துச் செலவுகளும் மொத்த இலாபத்தைவிட கூடுதலாக இருப்பின் அது நிகர நட்டமாகும்.

***........ நளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு***

ப வ

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| மொத்த நட்டம் கீ/கொ (வியாபாரக் கணக்கு) | xxx | மொத்த இலாபம் கீ/கொ (வியாபாரக் கணக்கு) | xxx |
| சம்பளம் | xxx | பெற்ற கழிவு | xxx |
| வாடகை, வரிகள் | xxx | பெற்ற வாடகை | xxx |
| எழுது பொருள்கள் | xxx | பெற்ற வட்டி | xxx |
| அஞ்சல் செலவுகள் | xxx | பெற்ற தள்ளுபடி | xxx |
| காப்பீடு | xxx | நிகர நட்டம் (முதல் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டியது) | xxx |
| பழுது பார்ப்பு | xxx | | |
| வியாபாரச் செலவுகள் | xxx | | |
| அலுவலகச் செலவுகள் | xxx | | |
| வட்டி செலுத்தியது | xxx | | |
| வங்கிக் கட்டணம் | xxx | | |
| இதர செலவுகள் | xxx | | |
| செலுத்திய கழிவு | xxx | | |
| அளித்த தள்ளுபடி | xxx | | |
| விளம்பரம் | xxx | | |
| வெளிதூக்குக் கூலி | xxx | | |
| பயணக் கட்டணம் | xxx | | |
| பகிர்வுச் செலவு | xxx | | |
| மறுகட்டுமச் செலவுகள் | xxx | | |
| வாராக் கடன் | xxx | | |
| தேய்மானம் | xxx | | |
| நிகர இலாபம் (முதல் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டியது | xxx | | |
| | xxx | | xxx |

www.Padasalai.Net

## 1.3.இருப்பு நிலைக் குறிப்பு:

இது இறுதிக் கணக்குகளின் இரண்டாவது பகுதியாகும். இவ்வறிக்கை வணிகத்தின் நிதிநிலையைக் காண்பிக்கக் கூடியதாகும். இருப்புநிலைக் குறிப்பு அனைத்து ஆள்சார் கணக்குகள் (முதல் மற்றும் எடுப்புகள்), சொத்துக் கணக்குகள் மற்றும் இலாப நட்டக் கணக்கில் கிட்டிய நிகர முடிவையும் உள்ளடக்கியதாகும். அனைத்துப் பற்றிருப்புகளும் வலதுப் பக்கத்தில் (சொத்துகள் பக்கத்தில்) எழுத வேண்டும். வரவு இருப்புகளை இடது பக்கத்தில் (பொறுப்புகள் பக்கத்தில்) எழுத வேண்டும்.

***......................................ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு***

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்கு | xxx | | கையிருப்பு ரொக்கம் | | xxx |
| ***கூட்டுக :*** நிகர இலாபம் | xxx | | வங்கியில் ரொக்கம் | | xxx |
| | xxx | | | | |
| அல்லது | xxx | | பற்பல கடனாளிகள் | | xxx |
| ***கழிக்க :*** நிகர நட்டம் | xxx | | இறுதிச் சரக்கிருப்பு | | xxx |
| | xxx | | அறைகலன் & பொறுத்துகள் | | xxx |
| ***கழிக்க :*** எடுப்பு | xxx | | | | |
| | xxx | | முதலீடுகள் | | xxx |
| ***கழிக்க :*** வருமானவரி | | xxx | பொறியும், பொறித்தொகுதியும் | | xxx |
| பற்பல கடனீந்தோர் | | xxx | விடு கருவிகள் | | xxx |
| செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு | | xxx | நிலம், கட்டடம் | | xxx |
| வங்கி மேல்வரைப் பற்று | | xxx | வணிக வளாகம் | | xxx |
| கடன் | | xxx | | | xxx |
| அடமானக் கடன் | | xxx | முன்கூட்டி செய்த செலவுகள் | | xxx |
| காப்பு நிதி | | xxx | புனை உரிமை | | xxx |
| | | | வணிகக் குறிகள் | | xxx |
| கொடுபட வேண்டிய செலவுகள் | | xxx | வணிக நற்பெயர் | | xxx |
| | | xxx | | | xxx |

www.Padasalai.Net


http://www.trbtnpsc.com/2017/06/latest-11th-study-materials-tamil-medium-english-medium.html